'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள், 28.3.2024 அன்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், மக்கள் நீதி மய்யம் தலைமை நிர்வாகி ஏ.ஜி.மவுரியா (ஐ.பி.எஸ்.ஓய்வு) உடனிருந்தனர்.

'இந்தியா' கூட்டணி சார்பில், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் வெற்றி வேட்பாளர் தொல்.திருமாவளவன் அவர்கள் பேரறிஞர் அண்ணா,அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாகச் சென்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆ.சங்கர் ஆகியோர் உள்ளனர்.

ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளர் ஐ.பெரியசாமி அவர்கள் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியில் சிபிஎம். கட்சி சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சச்சிதானந்தத்துடன் தீவிரமாக பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரித்தார் கிராமங்களில் வறுமையை ஒழித்த 100நாள் வேலை திட்டம் தொடர்ந்து கிடைக்க அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என பேசினார். அருகில் ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கமேடு பகுதியில் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, இந்தியா கூட்டணி கரூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் செ.ஜோதி மணியை ஆதரித்து வெள்ளமெனத் திரண்ட கூட்டத்தினர் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

பா.ஜ.க., அ.தி.மு.க.விற்குப் பாடம் புகட்ட – இந்தத் தேர்தலில்

'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வீர்!

எட்டயபுரத்தில் கனிமொழி கருணாநிதி பேச்சு!

தூத்துக்குடி, மார்ச் 29 -

நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. விற்கும் அ.தி.மு.க. விற்கும், தகுந்த பாடம் புகட்டிட, 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வெற்றி பெறச் செய்வீர் என்று வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி பேசினார்.

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக திமுக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே சிந்தலக்கரையில், தூத்துக்குடி மக்களவைத் தொகுதி திமுக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி மற்றும் ராமநாதபுரம் மக்களவைத் தொகுதி ஐயுஎம்எல் வேட்பாளர் நவாஸ் கனி ஆகியோரை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்.

பிரச்சார கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி பேசியது வருமாறு : -

இந்திய நாட்டை பாசிசத்தின் பிடியிலிருந்து மீட்டெடுக்க உதித்து இருக்கக்கூடிய சூரியன் திராவிட நாயகன், நம்முடைய முதலமைச்சர். சில மாதங்களுக்கு முன்னால் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் எல்லாம் இந்த கரிசல் பூமி கண்ணீரில் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒன்றிய அரசு கைக்கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், நான் இருக்கிறேன் உன்னுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு என்று கருணையோடு ஓடிவந்தது நம் முடைய முதலமைச்சர் தான். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர் எந்த பகுதியிலிருந்தாலும் நிவாரணம் வழங்கியது நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மட்டும் தான். வீடு இடிந்தவர்களுக்கு, இந்தியச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 4 லட்சம் ரூபாய் வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு, நம்முடைய முதலமைச்சர்.

அதேபோல பாதிக்கப்பட்ட விவசாயிகளாக இருக்கட்டும், ஆடு மாடுகளை இழந்தவர்களாக இருக்கட்டும், மாணவர்களாக இருக்கட்டும், வியாபாரிகளாக இருக்கட்டும் அத்தனை பேருக்கும் உதவிக்கரம் நீட்டுவது நம்முடைய முதலமைச்சர். இங்கே ஓட்டு கேட்க மட்டுமே வந்து கொண்டிருக்கக்கூடிய பிரதமர் தமிழ்நாட்டுக்கு நிவாரண நிதியும் கொடுக்க வில்லை, நமக்கு வரவேண்டிய நிதியையும் தருவதில்லை. நம்ம கிட்ட இருந்து வாங்குகின்ற வரியைக் கால் வாசி கூட திருப்பி கொடுக்கவில்லை. 1 ரூபாய் வாங்கினால் 29 பைசா தான். ஆனால் உத்தரப்பிரதேச அரசுக்கு 2 ரூபாய் 2 பைசா,

இப்படி தமிழ்நாட்டை வஞ்சித்துக் கொண்டிருக்கக் கூடிய ஓர வஞ்சனை செய்து கொண்டிருக்கக் கூடிய பாஜகவுக்கு, அவர்களோடு இத்தனை ஆண்டுகளாக அவர்கள் எடுத்த மக்களுக்கு விரோதமான, சிறுபான்மை விரோதமான, விவசாயிகளுக்கு விரோதமாக இருக்கக்கூடிய அத்தனை சட்டங்களையும் ஆதரித்து வாக்களித்து இன்று பிரிந்து விட்டோம் என்று நாடகமாடிக் கொண்டிருக்கக்கூடிய அதிமுக இரண்டு பேருக்கும் நாம் நல்ல பாடத்தைச் சொல்லித் தரக்கூடிய தேர்தல் இந்த தேர்தல் என்பதை உணர்ந்து கொண்டு இந்தத் தேர்தலிலே நாம் பணியாற்ற வேண்டும்.

ஒன்றே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் பிரதமர் மோடி என்ன சொன்னார் 75 ஆண்டுகள் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது இந்தியா உலகத்திலேயே பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்தில் முன்னேறிய நாடாக இருக்கும் என்று, அவருடைய சாதனை என்ன என்றால், இன்றைக்கு இந்தியா பசி குறியீடு, உலக பசி குறியீடு (Global hunger index) அதில் பார்த்தால் 111வது இடம். நமக்கு மேலே நேபால், பங்களாதேஷ், பாகிஸ்தான் இருக்கிறது. இது தான் அவர்கள் செய்திருக்கக்கூடிய சாதனை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் தமிழ் நாட்டில் நம்முடைய முதலமைச்சர். இங்கே பசி என்பது கிடையாது. தமிழ்நாட்டில் காலையில் பள்ளிக்கு வரக் கூடிய மாணவர்கள் கூட பசியோடு இருந்துவிடக்கூடாது என்பதற்காகக் காலை உணவுத் திட்டத்தை உருவாக்கி வழங்கி இருக்கக் கூடிய வள்ளல் நம்முடைய முதலமைச்சர். இதுதான் திராவிட மாடல் ஆட்சி யாரும் பசியோடு உறங்கச் செல்லக்கூடாது, யாரும் பசியோடு இருக்கக் கூடாது, மாணவர்கள் உயர வேண்டும், படிக்க வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் ஆட்சி. பசி என்பதைப் பற்றி கவலை கிடையாது யார் பட்டினி கிடந்தாலும் கவலை கிடையாது எங்களுடைய அரசியல் எங்களுடைய மத அரசியல் அது மட்டும் தான் எங்களுக்கு முக்கியம் என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடிய பாஜகவுக்கு மதத்தின் பெயரால் மக்களைப் பிரித்துக் கூடிய பாஜகவுக்கு இந்த தேர்தலில் நாம் ஒரு சரியான பாடத்தை கற்றுத் தர வேண்டும்.

இந்த நேரத்திலே மீண்டும் முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தூத்துக்குடிக்கு எப்பொழுதுமே ஒரு அன்போடு நாங்கள் வைக்கக்கூடிய கோரிக்கை எல்லாம் நிறைவேற்றித் தரக்கூடிய நம்முடைய முதலமைச்சர். சமீபத்தில் வின் பாஸ்ட என்ற உலகத்தில் இருக்கக்கூடிய மிகப்பெரிய கார் நிறுவனத்தை தூத்துக்குடி மக்களுக்காக வழங்கி இருக்கிறார்கள். அந்த நிறுவனம் தூத்துக்குடியில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு மட்டுமல்ல, ராமநாதபுரத்தில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரும் இதுதான் நம்முடைய முதல்வர் ஆட்சி இளைஞர்களுடைய எதிர்காலத்தை உருவாக்கிக் காட்டக்கூடிய மேம்படுத்தக்கூடிய ஆட்சி அந்த முதலமைச்சர் அவர்களுடைய வேட்பாளராக நின்று உங்களிடம், உங்களுடைய பொன்னான வாக்குகளை உங்களுடைய உயர்ந்த வாத்துகளை உதயசூரியன் சின்னத்தில் அளித்து மீண்டும் உங்களோடு பணியாற்றக்கூடிய ஒரு வாய்ப்பை எனக்கு அளிக்க வேண்டும் .

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகனை ஆதரித்து

ராணிப்பேட்டை முத்துக்கடையில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்குச் சேகரிப்பு!

அமைச்சர் ஆர்.காந்தி - கழக கூட்டணிக் கட்சியினர் பங்கேற்பு !

அரக்கோணம், மார்ச் 29-

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் ஜெகத்ரட்சகனை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ராணிப்பேட்டை முத்து கடையில் வாக்கு சேகரித்தார்.

அப்போது அவர் பேசிய தாவது :-

இராணிப்பேட்டை நாடாளுமன்ற தொகுதியில் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 9 ஆயிரம் கோடியில் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தொழிற் சாலை அமைக்க ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இராணிப் பேட்டை சிப்காட்டில் ரூ.14.5 கோடி மதிப்பீட்டில் அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சிப்காட் பகுதியில் உள்ள குரோமிய கழிவுகளை அகற்ற ரூ.11 கோடியில்திட்டமிடப்பட்டுள்ளது. குரோமிய கழிவுகளை நிரந்தரமாக அகற்ற ரூ.5.45 கோடியில் திட்டமிடப் பட்டுள்ளது.

இராணிப் பேட்டை புதிய பேருந்து நிலையம் ரூ.20 கோடியில் கட்டப் பட்டுள்ளது.

அரக்கோணம் நாடாளுமன்றத் தொகுதியில் பணப் பாக்கம் பேரூராட்சியில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் காலணி தொழிற்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்சாலை விரிவாக்கம் பணிக்கு ரூ.140 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சோளிங்கர் அரசு மருத்துவமனை ரூ.3 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டை தொகுதிக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அளித்த வாக்குறுதியின் படி நகரி - திண்டிவனம் ரெயில் பாதை அமைக்கப்படும். விவசாய கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றிய அரசின் தொழிற்சாலைகள் அமைக்கப்படும். அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

உடன் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் ஏ.வி. சாரதி , ஆற்காடு நகர தி.மு.க. செயலாளர் ஏ.வி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

ஆற்காடு பஸ் நிலையத்திலும் வேட்பாளர் ஜெகத் ரட்சகனுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரித்தார்.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:

தேதி		நாடாளுமன்ற தொகுதி
29.03.2024 (வெள்ளிக்கிழமை)	-	ஈரோடு
30.03.2024 (சனிக்கிழமை)	-	சேலம்
02.04.2024 (செவ்வாய்க் கிழமை)	-	திருச்சி
03.04.2024 (புதன் கிழமை)	-	சிதம்பரம்
06.04.2024 (சனிக் கிழமை)	-	சென்னை, திருபெரும்புதூர்
07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)	-	சென்னை
10.04.2024 (புதன் கிழமை)	-	மதுரை
11.04.2024 (வியாழக் கிழமை)	-	தூத்துக்குடி
14.04.2024 (ஞாயிற்றுக் கிழமை)	-	திருப்பூர்
15.04.2024 (திங்கட் கிழமை)	-	கோவை
16.04.2024 (செவ்வாய்க் கிழமை)	-	பொள்ளாச்சி

தென்காசி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட

சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி, மார்ச் 29-

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பணிக்குழு மற்றும் திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதி ஆலங்குளம் தொகுதி தேர்தல் பணிக்குழுவை மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி நாடாளுமன்ற தொகுதி ஆலங்குளம் மற்றும் தென்காசி நாடாளுமன்ற தொகுதி தென்காசி, கடையநல்லூர்,சட்டமன்ற தொகுதிகளுக்கு கீழ்க்காணும் நபர்கள் தொகுதி பார்வையாளருடன் இணைந்து தேர்தல் பணியாற்ற தேர்தல் பணிக்குழு பொறுப்பாளராக நியமனம் செய்யப்படுகிறார்கள்.



தேர்தல் பணிக்குழு - ஆலங்குளம் தொகுதி (திருநெல்வேலி நாடாளுமன்ற தொகுதி)

1.சுரேஷ்ராஜன்தலைமை கழக தொகுதி பார்வையாளர்

2. ஏ.எழில்வாணன் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர்

3.சீ.பொன்செல்வன் மாவட்ட பிரதிநிதி.

தேர்தல் பணிக்குழு - தென்காசி நாடாளுமன்றத் தொகுதிதென்காசி

1. கணேஷ் குமார்ஆதித்தன் தலைமை கழக தொகுதி பார்வையாளர்.

2.அப்துல்காதர்மாநில விவசாய அணி இணைச் செயலாளர்

3.ஆறுமுகசாமிதலைமை செயற்குழு உறுப்பினர்.

தேர்தல் பணிக்குழு - கடையநல்லூர் தொகுதி.

1.ஆவின் ஆறுமுகம்தலைமை கழக தொகுதி பார்வையாளர்.

2.மா.செல்லத்துரை தலைமை செயற்குழு உறுப்பினர்.

3.முத்துப்பாண்டிதலைமை செயற்குழு உறுப்பினர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் தேனி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் பெரியகுளம் தொகுதி பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் சரவணக்குமார் எம்.எல்.ஏ., உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல் மூக்கையா, வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டி, பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய தலைவர் தங்கவேல் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.